**<u>நியதிகளும் நிபந்தனைகளும் - Bucket List</u>**

FriMi ஊடாக ஆரம்பிக்கப்படுகின்ற அனைத்து Bucket List கணக்குகளையும் பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் நிர்வகிக்கும்.

**கீழே "ஏற்றுக்கொள்க" என்ற பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர் பின்வருமாறு ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்துகின்றார்:**

**இந்நியதிகளும் நிபந்தனைகளும் Bucket List உற்பத்தி தொடர்பிலான விபரங்களுடன் ஒன்றிணைந்து வாடிக்கையாளருக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இந்நியதிகளை மற்றும் நிபந்தனைகளை அத்துடன் அத்தகைய விபரங்களை வாடிக்கையாளர் வாசித்து புரிந்துகொண்டுள்ளார் என்றும் அவற்றின் மூலம் பிணிக்கப்படுவதற்கு இணங்கி சம்மதிக்கின்றார் என்றும்:**

**கணக்கை ஆரம்பித்தல்**

1. Bucket List கணக்கு உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் (KYC) உறுதிப்படுத்தல்களை நிறைவுசெய்வதை அனுசரித்து வங்கியினால் செயற்படுத்தப்பட்டுள்ள FriMi சேமிப்பு கணக்கொன்றை கொண்டுள்ள வாடிக்கையாளர் மூலம் ஆரம்பிக்கப்படலாம்.

2. ஒவ்வொரு Bucket List இற்கும் அதனுடன் தொடர்புடைய Bucket List கணக்கைத் திறக்க வேண்டும். அதற்கமைய, இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதன் மூலம் வங்கிக்கு வாடிக்கையாளர் மூலம் வழங்கப்பட்டுள்ள மிகவும் அண்மைய உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் விபரங்களை பயன்படுத்தி வாடிக்கையாளரின் பெயரில் Bucket List கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு வாடிக்கையாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

3. Bucket List கணக்கொன்றின் மீதான வரவுகளும் பற்றுகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்:-

   - மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளுக்கு நிதியளிப்பதற்கான FriMi சேமிப்பு கணக்கிலிருந்து மாற்றல்கள் அத்துடன்

   - Bucket List கணக்கொன்றினை மூடுவதன் மீது FriMi சேமிப்பு கணக்கொன்றிற்கான மாற்றல்கள்

   Bucket List கணக்கு மீது பற்று முடக்கலொன்று இடம்பெறச் செய்யப்படும், இங்கு Bucket List கணக்கொன்றிலிருந்து எந்நேரத்திலும் பணத்தை மீளெடுப்பதற்கு வாடிக்கையாளர் அனுமதிக்கப்படமாட்டார்.

4. ஒவ்வொரு Bucket List கணக்கும் FriMi யில் பேணப்படுகின்ற கணக்குகள் வகையினுக்குள் வகைப்படுத்தப்படுவதுடன் Bucket List கணக்குகள் தொடர்பில் ஏற்புடையதாகவிருக்கும் வட்டி வீதமும் வரிகளும் FriMi செயலியில் வெளியிடப்படும்.

5. Bucket List கணக்குகளுக்காக வாடிக்கையாளருக்கு இலத்திரனியல் கணக்கு கூற்றுகள் வழங்கப்படாது என்பதுடன் வாடிக்கையாளர், FriMi செயலியூடாக Bucket List கணக்குகளுக்கான கொடுக்கல்வாங்கல் விபரங்களைப் பார்வையிடலாம். செயற்பாட்டிலுள்ள வங்கி கட்டணங்களுக்குட்பட்டு காகித அடிப்படையிலான கணக்கு கூற்றுகள் கோரிக்கையின் மீது மாத்திரம் வழங்கப்படும்.

6. ஒவ்வொரு Bucket List கணக்கிற்கும் கணக்கிலக்கம் ஒன்று வழங்கப்படும். வங்கியினுடனான அனைத்து தொடர்பாடல்களிலும் அது குறிப்பிடப்பட வேண்டும்.

**முதிர்ச்சி/இலக்குத் தொகை மற்றும் முதிர்ச்சித் திகதி**

7. FriMi செயலியில் குறிப்பிடப்படும் குறைந்தபட்ச முதிர்ச்சி இலக்குத் தொகையினை Bucket List வேண்டுகின்றது.

8. ஒவ்வொரு Bucket List இனதும் வேண்டப்பட்ட மாதாந்த தவணை கொடுப்பனவுகளின் எண்ணிக்கையினை வாடிக்கையாளர் உரிய திகதியன்றும் வைப்பிலிட்டால் மாத்திரம் முதிர்ச்சித் திகதியன்று முதிர்ச்சி இலக்குத் தொகையினை எய்துவதற்கு இயலக்கூடியவராகவிருப்பர்.

9. வாடிக்கையாளர், 02 மாதங்களைக் கொண்ட குறைந்தபட்ச காலப்பகுதியில் அல்லது காலத்துக்கு காலம் வங்கி குறித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு காலப்பகுதியில் முதிர்ச்சி இலக்குத் தொகையினை அடைவதற்குத் தெரிவுசெய்யலாம்.

10. வேண்டப்படுகின்ற போதும் வேண்டப்படுகின்றவாறும் புதிய Bucket List களுக்கான முதிர்ச்சி இலக்குத் தொகைகளை மாற்றுவதற்கு வங்கி உரிமையினை கொண்டுள்ளது.

11. Bucket List ஐ உருவாக்குகின்ற நேரத்தில் வாடிக்கையாளரின் தேவையினை அடிப்படையாக கொண்டு வாடிக்கையாளர் பின்வரும் விபரங்களை பதிவுசெய்யவேண்டும்:

- Bucket List பெயர்
- முதிர்ச்சி இலக்குக் தொகை
- தொடங்கும் திகதி
- முதிர்ச்சித் திகதி
- ஆரம்ப வைப்புத் தொகை

12. வாடிக்கையாளர் மூலம் பதிவுசெய்யப்பட்ட Bucket List பெயருக்கானவை தவிர, மேலே 11 ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட எவையதனும் விபரங்களை வாடிக்கையாளர் திருத்த முடியாது.

13. Bucket List உருவாக்கப்பட்ட நேரத்தில் வாடிக்கையாளர் மூலம் தெரிவுசெய்யப்பட்ட முதிர்ச்சித் திகதி அன்று முதிர்ச்சி இலக்குத் தொகையினை எய்தும் பொருட்டு, மாதாந்த தவணைக் கொடுப்பனவுத் தொகை, தவணைக் கொடுப்பனவுகளுக்கான உரிய திகதி என்பவற்றை கணக்கிட்டு வங்கி FriMi செயலி மீது தானாக ஆலோசனை வழங்கும்.

**தவணைக் கொடுப்பனவுகள்-**

14. மாதாந்த தவணைக் கொடுப்பனவு தொகையானது முதிர்ச்சி இலக்குத் தொகை, ஆரம்ப வைப்பு மற்றும் முதலீட்டுக் காலம் என்பவற்றை கருத்திற் கொண்டு வங்கியினால் கணிக்கப்படும்.

15. Bucket List கணக்கில் வைப்பிலிடப்பட்ட எவையேனும் பணத்தொகை தொடர்பில் மீளளிப்புகள் /திரும்பல்கள் எதுவும் அனுமதிக்கப்படாது.

16. மாதாந்த தவணை வைப்புத் தொகை உரிய திகதியன்று FriMi சேமிப்புக் கணக்கிலிருந்து தன்னியக்கமாக மாற்றல்செய்யப்படும், (ஆயின், போதிய நிதியங்கள் கிடைக்கப்பெறுவதாக உட்பட்டு).

**முதிர்ச்சி மீதான வட்டியும் கொடுப்பனவுகளும்**

17. Bucket List கணக்கை ஆரம்பிக்கும் நேரத்தில் வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட நேஷன் சேவர் சேமிப்பு வட்டி வீதம் Bucket List கணக்கின் நாளாந்த மீதி மீது வங்கியினால் கணிக்கப்பட்டு முதிர்ச்சித் திகதி வரை மாதாந்தம் Bucket List கணக்கிற்கு வரவுவைக்கப்படும்.

18. Bucket List கணக்கிற்கு செலுத்தப்படத்தக்க வட்டி வீதத்தை மாற்றுவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு வங்கி உரிமையினை கொண்டிருக்கும்.

19. உரிய திகதியன்று மாதந்த தவணை வைப்பகளின் வேண்டப்பட்ட எண்ணிக்கையை வாடிக்கையாளர் வைப்பிலிட்டு இருப்பாராயின், வாடிக்கையாளரின் Bucket List கணக்கானது முதிர்ச்சித் திகதியன்று அல்லது சட்டத்தினால் வேண்டப்பட்டவாறு முதலீட்டு காலப்பகுதியின் போது செலுத்தப்படக்கூடிய வரிகளை மற்றும் வேறு நியதிச்சட்ட அறவீடுகளை கழிப்பதற்குட்பட்டு உழைக்கப்பட்ட வட்டி உள்ளடங்கலாக முதிர்ச்சித் திகதியன்று முதிர்ச்சி இலக்குத் தொகையைக் கொண்டிருக்கும்.

**Bucket List கணக்கினை முடிவுறுத்தல்**

20. வாடிக்கையாளர், முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் அல்லது முதிர்ச்சித் திகதியன்று அல்லது பின்னர் Bucket List கணக்கினை மூடலாம். முதிர்ச்சித் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் Bucket List கணக்கினை மூடாமல் இருப்பதற்கு வாடிக்கையார் தெரிவுசெய்வாராயின், செயற்பாட்டிலுள்ள Bucket List கணக்கு வட்டி வீதத்திற்கு அமைவாக கிடைக்கப்பெறுகின்ற நிலுவை மீது வாடிக்கையாளர் தொடர்ந்தும் வட்டியினை ஈட்டுவார்.

21. வாடிக்கையாளர் Bucket List கணக்கினை மூடுவதற்கு தெரிவுசெய்வாராயின் அதிலுள்ள பணத்தொகைகள் FriMi சேமிப்பு கணக்கிற்கு தன்னியக்கமாக மாற்றல் செய்யப்படும்.

22. Bucket List கணக்கினை மூடுவதன் மீது மூடப்பட்ட Bucket List கணக்கில் எவையேனும் கொடுக்கல்வாங்கல்களை செயலாற்றுவதற்கு வாடிக்கையாளர் அனுமதிகப்படமாட்டார்.

23. வாடிக்கையாளருக்கு அறிவித்தலை வழங்குவதற்கும் Bucket List கணக்கினை மூடுவதற்கும் அத்துடன் அத்தகைய மூடுதலின் மீது அதிலுள்ள பணத்தொகைகளை FriMi சேமிப்பு கணக்கிற்கு மாற்றல் செய்யபடுவதற்கும் வங்கி உரிமையினை கொண்டிருக்கும்.

**நானாவிதமானவை**

24. இதில் குறிப்பிடப்பட்டவைக்கு முரணாக எதுஎவ்வாறிருப்பினும், வங்கியானது வங்கிக்கான வாடிக்கையாளரின் எவையேனும் பொறுப்புகளை வாடிக்கையாளரின் Bucket List கணக்குடன் அறிவித்தலின்றி ஒன்றுசேர்த்து அத்தகைய பொறுப்புகள் உண்மையாயினும் சரி அல்லது எதிர்பாராதவையாயினும் சரி, முதன்மையானதும் சரி அல்லது பிணைய உறுதி உடையதாயினும் சரி அத்துடன் பலதாக அல்லது ஒருமித்ததாக இருப்பதாயினும் சரி ஏதேனும் வேறு கணக்கு மீது அல்லது வேறு ஏதேனும் விடயத்தில் வங்கிக்கு வாடிக்கையாளரிடமிருந்து கடனாகசெலுத்த வேண்டிய வேறு தொகைக்கு/தொகைகளுக்கு எதிராக Bucket List கணக்கின் வரவிற்கான ஏதேனும் தொகையினை/நிலுவையினை எதிரீடு செய்யலாம் அல்லது மாற்றல் செய்யலாம்.

25. வங்கி, எந்நேரத்திலும் இந்நியதிகளையும் நிபந்தனைகளையும் மாற்றுவதற்கு தானாக உரிமையினை கொண்டிருக்கும். அத்தகைய மாற்றங்கள் பற்றிய அறிவித்தல் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

26. இந்நியதிகளும் நிபந்தகைளும் சட்டத்தினால் அத்தகைய திருத்தங்கள் அவசியப்படுத்துகின்ற விடத்து தன்னியக்கமாக மாறுபவையாக இருக்கும்.

27. இதில் வேறு வகையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டாலன்றி, இந்நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பெரிய எழுத்துக்களினான சொற்பதங்கள் வாடிக்கையாளரினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட FriMi நியதிகள் மற்றும் நிபந்தனைகள் (‘‘பிரதான ஒப்பந்தம்’’) கொண்டிருக்கும் அதே பொருளை கொண்டிருக்கும்.

28. இந்நியதிகளும் நிபந்தனைகளும் பிரதான ஒப்பந்தம் மற்றும் வங்கியின் பொதுவான தொழில் நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின் எற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும் (இவற்றின் பிரதிகள் கோரிக்கையின் பேரில் கிடைக்கப்பெறுகின்றன). அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இதில் கூட்டிணைக்கப்பட்டிருந்தாலும் சரி கூட்டிணைக்கப்படவில்லையாயினும் சரி அதனை பொருட்படுத்தாது வாடிக்கையாளர் அனைத்து அத்தகைய நியதிகளாலும் நிபந்தனைகளாலும் பிணிக்கப்படுவார்.

**வரைவிலக்கணங்கள்**

‘‘வங்கி’’ என்பது நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பிஎல்சி (PQ 118) என்பது பொருளாகும்.

“Bucket List” என்பது நிர்ணயிக்கப்பட்ட நிதியியல் இலக்குகளை அடையும் பொருட்டு மாதாந்த தவணை கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு (தானியக்கமாக்கப்பட்ட அல்லது கைமுறையான) வாடிக்கையாளர்களை இயலச்செய்கின்ற FriMi ஊடாக வங்கியினால் வழங்கப்படுகின்ற ஒரு உற்பத்தி பொருளாகும்.

‘‘Bucket List கணக்கு’’ என்பது நேஷன்ஸ் சேவர் சேமிப்பு கணக்குவகையின் கீழ் வருகின்ற வங்கியின் ஒரு சேமிப்பு கணக்கு உற்பத்தி என்பது பொருளாகும்.

“KYC’’ என்பது உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் என்பது பொருளாகும்.

‘‘முதிர்ச்சித் திகதி’’ என்பது முதிர்ச்சி இலக்குத் தொகையினை அடைவதற்கு வாடிக்கையாளர் மூலம் தெரிவுசெய்யப்பட்ட திகதி என்பது பொருளாகும்.

‘‘முதிர்ச்சி இலக்குத் தொகை’’ என்பது முதிர்ச்சித் திகதியளவில் Bucket List ஒன்றின் கீழ் அடைந்து கொள்வதற்கு வாடிக்கையாளர் இலக்கிடுகின்ற தொகை என்பது பொருளாகும். ஆயின் வேண்டப்பட்ட தவணை கொடுப்பனவு எண்ணிக்கை முதலீட்டுக் காலப்பகுதிக்காக Bucket List கணக்கிற்கு வைப்பிலிடப்பட வேண்டும்.